செ.வெ.எண்: 598/2016 நாள் : 02.09.2016

**செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ”முகநூல்” பக்கம் அறிமுகம்.**
**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப.,அவர்கள் தகவல்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது அறிவிப்புகள் மற்றும் அரசின் அனைத்துத் துறைகளிலும் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், சாதனைகள் மற்றும் வளர்சசிப்பணிகள் ஆகியவற்றை மக்களிடையே எடுத்துச் செல்லும் பணியினைச் செய்தி மக்கள் தொடர்பு துறை செய்து வருகிறது.

இத்துறையின் மூலம் அரசின் செய்தி வெளியீடுகள், புகைப்படங்கள் மற்றும் வீடியோ பதிவுகள் ஆகியன மின்னஞ்சல் மூலமாக நாளிதழ்கள், தொலைக்காட்சிகள், செய்தி முகமைகள், காலமுறை இதழ்கள் மற்றும் இணையதள செய்தி நிறுவனங்கள் போன்ற அனைத்து ஊடகங்களுக்கும் அனுப்பப்பட்டு, அவற்றை செய்தித்தாள்கள் மற்றும் ஊடகங்களில் வெளியிடப்பட்டு, பொதுமக்கள் அவற்றைத் தெரிந்து கொள்வதற்கு இத்துறை உறுதுணையாக இருந்து வருகிறது. செய்தி மக்கள் தொடர்புத்துறையின் இணையதளமான www.tndipr.gov.in மற்றும் அரசு இணையதளமான www.tn.gov.in ஆகிய இணையதளங்கள் வாயிலாகவும் அரசின் செய்திகள் மக்களைச் சென்றடைய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, சமூக வலைதளங்களின் முன்னேற்றம் மற்றும் அவற்றின் வளர்ச்சியின் காரணமாக, அரசின் அனைத்து செயல்பாடுகள் மற்றும் நிகழ்வுகளை நொடிப்பொழுதில் பொதுமக்களை சென்றடையும் வகையில், அனைத்து தரப்பு மக்களும் பெரிதும் பயன்படுத்தி வரும் முகநூல் (Facebook) வாயிலாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது அறிவிப்புகள் மற்றும் அரசின் திட்டங்கள் ஆகியவற்றை உடனுக்குடன் பதிவிட்டு வெளியிட, இத்துறை நடவடிக்கை எடுத்துள்ளது. முகநூலில் இத்துறையின் சார்பாக ‘TN DIPR” என்னும் முகநூல் பக்கம் உருவாக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது அறிவிப்புகள் மற்றும் அரசின் அனைத்து துறைகளிலும் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், சாதனைகள் மற்றும் வளர்ச்சிப்பணிகள் ஆகியவற்றை மக்களிடையே எடுத்துச் செல்லும் பணியினைச் செய்தி மக்கள் தொடர்புத்துறை செய்து வருகிறது.

எனவே பொதுமக்கள் அனைவரும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள அறிவிப்புகளை, இந்த முகநூல் மூலம் பார்த்து பயன்பெறுமாறு, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.